# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,508 — 1958 අගෝස්තු 29 වැනි සිකුරාදා — 29.8.1958**

11,508 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. 50 — **உப உணவுப் பொருட்கள்.**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), செல்லப்பா சின்னத்தம்பி ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) கீழே குறிக்கப்பட்டுள்ள உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன் :—

(அ) 1958 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ம் திகதி வெளிவந்த 11,373 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஆனிமாதம் 20 ம் திகதியைக் கொண்ட வி. 47 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில் விபரிக்கப்பட்டிருக்கும் கருவாட்டு வகைகளை விட மற்ற உப உணவுப் பொருட்களின் விலைக் கட்டளையை எடுத்து விடுகிறேன்.

(ஆ) 1958 ம் ஆண்டு ஆடிமாதம் 19 ம் திகதி வெளிவந்த 11,432 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 17 ம் திகதியைக் கொண்ட வி. 48 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை எடுத்து விடுகிறேன்.

(இ) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் திகதி வெளிவந்த 11,472 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ம் திகதியைக் கொண்ட வி. 49 என்னும் இலக்கமுள்ள எனது விலைக் கட்டளையை எடுத்துவிடுகிறேன்.

(2) அதனோடிருக்கும் அட்டவணை (அ) வில் 2 வது, 3 வது பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி விற்கும் ஆகக் கூடிய மொத்த விலைகளாக உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையில் உள்ள பொருட்களை அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் இந்த விலைகளுக்கு கூடுதலாக விற்றலாகாத.

(3) அதனோடிருக்கும் அட்டவணை " ஆ " வில் 2 வது, 3 வது பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையிலுள்ள பொருட்களை அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் குறிக்கப்பட்ட விலைகளுக்குக் கூடுதலாக விற்றலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறிக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களில் எத்தொகையையாவது திருப்பிவிற்பதற்காக விற்றல் அல்லது ஒரு பொருளின் நிறை உள்ள 28 ருத்தல் நிறை உள்ள பொருள் அல்லது அதிற் கூடிய தொகை ஒருதடவையில் விற்றல் மொத்த விலையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறிக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களில் 28 ருத்தலுக்கு குறைந்த எப்பொருளையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொருபொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப் பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த முதலாம் அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்றபொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம், 5 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளையும், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் திகதி பி. ப. 3 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

எஸ். சின்னத்தம்பி,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா பகுதி.

## முதலாம் அட்டவணை

வவுனியா தெற்கு (தமிழ்) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த ஆசிகுளம், வவுனியா, நொச்சிமோட்டை, நெடுங்குளமும் புதுக்குளமும்

வவுனியா தெற்கு (சிங்கள) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சார்ந்த மடுகந்தையும் ஈரப்பெரியகுளமும்

| பத்தி 1 | | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| நம். | விபரம் | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1 | வெண்காயம் (ஈர வெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. | 22 02 | 0 24 |
| 2 | கொத்தமல்லி .. .. | 42 22 | 0 42 |
| 3 | சீரகம் .. .. | 121 94 | 1 22 |
| 4 | செத்தல் மிளகாய்.. .. | 78 27 | 0 80 |
| 5 | பாசிப்பயறு .. .. | 47 37 | 0 47 |
| 6 | முழு உளுந்து .. .. | 49 16 | 0 50 |
| 7 | கடலைப் பருப்பு .. .. | 42 00 | 0 42 |
| 8 | மைசூர்ப் பருப்பு .. .. | 62 78 | 0 62 |
| 9 | ஈர வெண்காயம் .. .. | 27 22 | 0 30 |
| 10 | உருளைக் கிழங்கு .. .. | 31 40 | 0 33 |
| 11 | மாசி .. .. | 253 10 | 2 50 |
| 12 | கடுகு .. .. | 73 08 | 0 72 |
| 13 | உப்பு .. .. | — | 0 06 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| நம். | பகுதி | முதலாம் அட்டவணையில் 2ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு மொத்த வியாபாரி அந்தர் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் விலை (மொத்தம்) | முதலாம் அட்டவணையில் 3ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி இருத்தல் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1 | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச் சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்திரன் குளம், வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் சிங்கள பிரிவுக்குச் சேர்ந்த சூடுவெந்த புலவு, மருதமடுவைத்தவிர்ந்த உலுக்குளம் .. .. | 0 25 | 0 01 |
| 2 | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச் சேர்ந்த பெரிய புளியங்குளம், வாகை கட்டினஓலுக்குளம், வாழை வைத்த குளமும், வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் சிங்களப் பிரிவில் உலுக் குளம் பகுதிக்குச் சேர்ந்த மருதமடு கிராமவிதானையின் பகுதி .. | 0 50 | 0 01 |
| 3 | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஏலுமடு, கனகராயன் குளம், புளியங்குளம் .. | 0 50 | 0 01 |
| 4 | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன், மணவாளன்பட்ட முறிப்பு தண்டுவான், கச்சிலமடுவும் ஊஞ்சல் கட்டியும் .. .. .. .. | 0 75 | 0 02 |
| 5 | வவுனியா கரை துறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவும் வாளை முள்ளிவாய்க்காலும் | 1 00 | 0 02 |
| 6 | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த குமுளமுனை, புதுக்குடியிருப்பும் அம்பலவன் பொக்கணையும் .. | 1 25 | 0 02 |
| 7 | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த கொக்கிலாயும் கொக்குத் தொடுவாயும் .. .. | 1 50 | 0 03 |

**குறிப்பு**.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.